www.Padasalai.Net www.TrbTnpsc.com

V8T

விருதுநகர் மாவட்டம்
அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2023

வகுப்பு 8
தமிழ்

கால அளவு: 2.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

பகுதி - I

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **10×1=10**

1) 'விலங்கொடித்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............
அ) விலம் + கொடித்து ஆ) விலம் + ஒடித்து
இ) விலன் + ஒடித்து ஈ) விலங்கு + ஒடித்து

2) 'செம்மரம்' என்னும் சொல் ............. த்தொகை
அ) வினை ஆ) பண்பு இ) அன்மொழி ஈ) உம்மை

3) பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை ..........
அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள்
இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்

4) காட்டிலிருந்து வந்த ............ கரும்பைத் தின்றன.
அ) முகில்கள் ஆ) முழவுகள் இ) வேழங்கள் ஈ) வேய்கள்

5) அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது ..........
அ) விளக்கு ஆ) கல்வி இ) விளையாட்டு ஈ) பாட்டு

6) என் நண்பர் பெரும் புலவராக இருந்தபோதும் ............. இன்றி வாழ்ந்தார்
அ) சோம்பல் ஆ) அகம்பாவம் இ) வருத்தம் ஈ) வெகுளி

7) உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று ..........
அ) தலைவலி ஆ) காய்ச்சல்
இ) புற்றுநோய் ஈ) இரத்தக் கொதிப்பு

8) இடம் + எங்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ............
அ) இடவெங்கும் ஆ) இடம் எங்கும்
இ) இடமெங்கும் ஈ) இடம் மெங்கும்

9) பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல் ........
அ) செல்க ஆ) ஓடு இ) வாழ்க ஈ) வாழிய

10) இயற்கையைப் போற்றுதல் தமிழர் ..........
அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5×1=5**

11) முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் ........... யும் ஓட்டிவிடும்
12) 'மாங்கனி நகரம்' என்று அழைக்கப்படும் நகரம் ..........
13) மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ...........
14) ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற இடம் ..........
15) கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ............ என அழைக்கப்பட்டன.

**இ) பொருத்துக** **5×1=5**

| | | | |
|---|---|---|---|
| 16) வையம் | - | அ) | திரிதல் விகாரம் |
| 17) முகில் | - | ஆ) | தோன்றல் விகாரம் |
| 18) மரவேர் | - | இ) | உலகம் |
| 19) மட்பாண்டம் | - | ஈ) | கெடுதல் விகாரம் |
| 20) கடைத்தெரு | - | உ) | மேகம் |

பகுதி - 2

**குறுகிய விடையளி:**

**அ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி:** **4×2=8**

21) நோயின் மூன்று வகைகள் யாவை?
22) அரசன் தண்டிக்கும் முறை யாது?
23) தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
24) தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?
25) புயல் காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?

**ஆ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி:** **4×2=8**

26) கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?
27) நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?
28) திரைத்துறையில் எம்.ஜி.ஆரின் பன்முகத் திறமைகள் யாவை?
29) பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?
30) தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**இ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி:** 2×2=4

31) எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

32) மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?

33) இயல்புப் புணர்ச்சி என்றால் என்ன? சான்று தருக.

## பகுதி - 3

**அனைத்திற்கும் விடையளி:**

**அ) சிறு வினா** 3×4=12

34) அ) சோழ வீரர்களைக் கண்ட கலிங்கப்படை வீரர்களின் செயல்களாகக் கலிங்கத்துப்பரணி கூறுவன யாவை?

**(அல்லது)**

ஆ) உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

35) அ) பிரம்பினால் பொருள்கள் செய்யும் முறையைக் கூறுக.

**(அல்லது)**

ஆ) எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.

36) அ) வல்லினம் மிகாத் தொடர்கள் மூன்றனை எழுதுக.

**(அல்லது)**

ஆ) ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

**ஆ) சிந்தனை வினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்)** 2×5=10

37) மழைவளம் பெருக நாம் செய்ய வேண்டுவன யாவை?

38) நோயின்றி வாழ நாம் என்னென்ன வழிகளைக் கையாளலாம்?

39) நிலவளத்தினைக் காப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய செயல்களாக நீங்கள் கருதுவன யாவை?

## பகுதி - 4

**அடிபிறழாமல் எழுதுக.:** 4+2=6

40) கற்றோர்க்குக் .......... எனத் தொடங்கும் ‘கல்வி அழகே அழகு’ பாடல்

41) ‘படும்’ - என முடியும் திருக்குறள்

## பகுதி - 5

**மொழிப்பயிற்சி (எவையேனும் நான்கனுக்கு மட்டும்):** 4×2=8

42) **சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

அ) பால் ............. (குடி / பருகு) ஆ) பூ .......... (கொய் / பறி)

43) **தொடர்களை மாற்றுக.**

அ) அந்தோ! பூனையின் காலில் அடிபட்டுவிட்டதே! (செய்தித் தொடராக மாற்றுக)

ஆ) காட்டில் புலி நடமாட்டம் உள்ளது. (வினாத் தொடராக மாற்றுக)

44) **கலைச்சொல் அறிக**

அ) Millets - ஆ) Leadership -

45) **உவமைத் தொடர்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.**

அ) குன்றின் மேலிட்ட விளக்கைப் போல

ஆ) வேலியே பயிரை மேய்ந்தது போல

46) **உரிய இடங்களில் நிறுத்தற்குறிகளை இடுக.**

அ) குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை ஆகியன ஐந்திணைகள்

ஆ) அந்தோ இயற்கை அழிகிறதே

47) **சரியான எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்பு**

அ) தாங்கள் படிக்க வேண்டிய புத்தகங்கள் இவை ..........

ஆ) ஈ மொய்த்த பண்டங்கள் உடலுக்கு நன்மை செய்வன ............

## பகுதி - 6

**விரிவான விடையளி:** 3×8=24

48) அ) எம்.ஜி.ஆரின் பண்புநலன்களை விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) காப்பியக் கல்வி குறித்துத் திரு.வி.க கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

49) அ) ‘வெட்டுக்கிளியும் சருகுமானும்’, கதையைச் சுருக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) அறிவுசால் ஔவையார் - என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.

50) அ) இருப்பிடச் சான்று வேண்டி வாட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக. தலைப்பு எழுதுக.
முன்னுரை - நோய்வரக் காரணங்கள் - நோய் தீர்க்கும் வழிமுறைகள் - வருமுன் காத்தல் - உணவும் மருந்தும் - உடற்பயிற்சியின் தேவை - முடிவுரை.

- - - - - -

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com